## <u>சுருக்கம்</u>

பணியாளர் சங்கம் – 'தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கத்தின்' பெயரை 'தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்' என பெயர் மாற்றம் செய்தும், அச்சங்கத்தின் அமைப்பு சட்ட திருத்த விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.110** **நாள்:30.06.2009.**

**படிக்க:**

(1) அரசாணை (நிலை) எண்.1824, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 05.09.1973.

(2) மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கம், தேனி அல்லிநகரம் மனு நாள் இல்லை.

(3) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 46208/07/எச்1, நாள் 06.12.2007 மற்றும் 24.12.2008.

---

**<u>ஆணை:–</u>**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் அளித்து ஆணையிடப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கம் தனது மனுவில் மாநில பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட சங்க விதித் திருத்தம் சம்பந்தமான தீர்மானங்களுக்கு ஒப்புதலும் மற்றும் 'தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கம்' என்பதனை 'தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்' என பெயர் மாற்றம் செய்தும் உரிய ஆணை வெளியிடுமாறு அச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இதன் மீது விழுப்புரம் நகராட்சி உதவியாளர், திரு அரங்க.பார்த்திபன், அன்னார் தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கத்தின் தலைமை நிலைய செயலாளர் எனக் குறிப்பிட்டு தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் விருதுநகரில் நடத்தப் பெற்றது தொடர்பாகவும், சங்க தேர்தல் குறித்தும் சங்க உப விதிகளின்படி செல்லத்தக்கவை அல்ல என விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் ஓ.எஸ்.எண்.200/2007 தொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டு, வழக்கு தொடுத்திருந்தார். இவ்வழக்கில் "வாதியின் வருகை தவறுகையால் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது" என விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிபதி தள்ளுபடி செய்துவிட்டார்.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில், திரு அரங்க பார்த்திபன் என்பவர் தொடர்ந்த வழக்கு ஓ.எஸ்.எண்.200/2007 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஐ.ஏ.எண்.575/2007 நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கம் தனது கடிதத்தில், 30.08.2007 – ல் விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

சங்கத்தின் மாநில தலைவர் அவர்களால் தொடரப்பட்ட வழக்கில் 04.09.2008–ம் தேதி விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிப்பேராணையின்படி முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மூல வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்குடன் இணைந்து ஐ.ஏ.எண்.575/2007–ல் தொடரப்பட்ட வழக்கு எவ்வித மூலாதாரமும் இல்லாத வகையில் தள்ளுபடியாகி உள்ளது என்றும் தெரிவித்து, சங்கத்தின் பொதுக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்கள் அடிப்படையில் 'தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்' என்ற பெயருக்கும், புதிதாக திருத்தம் செய்யப்பட்டுள்ள அமைப்பு சட்ட விதிகளுக்கும் உரிய அனுமதியினை வழங்கிடுமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில், தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கத்தின் கோரிக்கை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பு ஆகியவற்றை அரசு நன்கு பரிசீலித்து தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கம், தேனி–அல்லி நகரம் மாநில பொதுக்குழுவில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட "தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர் சங்கம்" என்ற பெயரினை "தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்" என பெயர் மாற்றம் செய்யவும், இணைப்பில் கண்டுள்ள அமைப்பு சட்டவிதி திருத்தங்களுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணையிடுகிறது.

5. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அ.சா.எண். 6292/K/09, நாள் 18.02.2009–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
தலைவர், தமிழ்நாடு நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கம் (பெயர் மாற்றத்திற்கு பின் தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்), மாநில அலுவலகம், நகராட்சி அலுவலகம், தேனி அல்லிநகரம்.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
ஆணையாளர், அனைத்து நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.
<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந மு.2) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம்

### அமைப்பு விதிகள்

1 **சங்கத்தின் பெயர்**

தமிழ்நாடு நகராட்சி அலுவலர் சங்கம் என்ற பெயரில் இயங்கும்.

2 **சங்கத்தின் தலைமையிடம்**

சங்கத்தின் தலைவர் செயலகம் (குடியிருப்பு விலாசம்) சங்கத்தின் தலைமையிடமாகும்.

3 **நோக்கங்கள் :**

3. 1 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளில் பணிபுரியும் ஊழியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல்.

3. 2 ஊழியர்களிடையே தேசப்பற்று, தோழமை உணர்வை வளர்த்தல்.

3. 3 நகராட்சியில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் அரசு ஊழியர்கள் என்ற அடிப்படையில் அரசினை அணுகுதல்.

3. 4 திறமையான நிர்வாகத்தைத் தருவதன் மூலம் மக்கள் சேவையை திறம்படச் செய்தல்.

3. 5 பிற துறைச் சங்கங்களுடன் இணைந்து செயல்படுதல்.

3. 6 பொதுக்கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் இயக்கங்களில் பொது சங்கங்களுடன் இணைந்து செயல்படுதல்.

3. 7 நகராட்சி ஊழியர்கள் பெற்றுவரும் உரிமைகள் சலுகைகளுக்கு இழப்பின்றியும், புதிய சலுகைகள் பெறுவதற்கும் திட்டமிட்டு செயலாற்றுதல்.

4 **சங்க அமைப்பு :**

4. 1 தமிழகத்தில் உள்ள அனைத்து நிலை நகராட்சிகளையும் உள்ளடக்கிய மாநில அமைப்பாக சங்கம் செயல்படும்.

4. 2 ஒவ்வொரு மண்டலத் தலைமையிடத்திலும், நகராட்சி நிர்வாக அமைப்பின் கீழான நிர்வாக நிலைகளிலும், மண்டல மையம் / நிர்வாகக்கிளைகள் செயல்படும்.

4. 3 ஒவ்வொரு நகராட்சியிலும் கிளைச் சங்கம் செயல்படும்.

5 **உறுப்பினராகத் தகுதி :**

5. 1 தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் (Group –A தவிர) உறுப்பினராகச் சேர தகுதி உள்ளவர்கள்.

5. 2 ஆண்டு தோறும் நிர்ணயிக்கப்படும் சந்தா செலுத்தி (வசூல் செய்யப்படும் நேரத்தில்) உறுப்பினர் பதிவும், புதுப்பித்தலும் மேறகொள்ள வேண்டும். புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் உறுப்பினர் தகுதி இழப்பர்.

5. 3 சங்க ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை.

5. 4 ஆண்டுச் சந்தா ரூ.30/– இதில் ரூ.10/– நகராட்சி கிளைக்கும், ரூ.10/– மண்டல மையத்திற்கும், ரூ.10/– மாநில மையத்திற்கும் வழங்கப்பட வேண்டும்.

6 **உறுப்பினர் தகுதி இழத்தல் :**

6. 1 ஆண்டு தோறும் சந்தா புதுப்பிக்காமல் இருத்தல்.

6. 2 உறுப்பினர் இராஜினாமா செய்தல்.

6. 3 நகராட்சி பணியில் இருந்து ஓய்வு பெறுதல்.

6.4 சங்க விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

6.5 சங்கத்திலிருந்து உறுப்பினரை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நீக்கி வைக்கும் அதிகாரம் மாநில செயற்குழுவிற்கு உள்ளது.

6.6 சங்கத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்டவர், மீண்டும் எழுத்து மூலம் விண்ணப்பித்து, அதனை நகராட்சி கிளை பரிசீலித்து, மாநில செயற்குழுவிற்கு, பரிந்துரைக்கும், இறுதி முடிவை மாநில செயற்குழு எடுக்கும்.

6.7 நகராட்சி கிளை நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மாநில செயற்குழுவிடம் இருக்கும்.

6.8 மண்டல நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மாநில செயற்குழுவிடம் இருக்கும்.

6.9 மாநில நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க மண்டல மையத்திற்கோ நகராட்சி கிளைக்கோ அதிகாரம் இல்லை.

6.10 மண்டல மைய நிர்வாகிகள் மீது நகராட்சி கிளை நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் இல்லை.

6.11 மாநில நிர்வாகிகள் மீது மாநில பொதுக்குழுவில் தீர்மானம் கொண்டு வந்து, பெரும்பான்மை அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கை மாநில நிர்வாகிகளை கட்டுப்படுத்தும்.

## 7 <u>சங்க கட்டமைப்பு :</u>

7.1 நகராட்சி கிளைதான் சங்கத்தின் ஆணிவேர் – ஆதார அமைப்பு.

7.2 **நகராட்சி கிளை நிர்வாகம் வருமாறு :**

| | |
|---|---|
| கிளை தலைவர் | – 1 |
| கிளை துணைத்தலைவர்கள் | – 2 (அதிக பட்சம்) |
| கிளை செயலாளர் | – 1 |
| கிளை இணைச்செயலாளர்கள் | – 2 (அதிக பட்சம்) |
| கிளைப் பொருளாளர் | – 1 |

<u>தேர்வு நிலை, சிறப்பு நிலை , நகராட்சிகளுக்கு</u>

| | |
|---|---|
| தலைவர் | – 1 |
| துணைத்தலைவர்கள் | – 3 (அதிக பட்சம்) |
| செயலாளர் | – 1 |
| இணைச்செயலாளர்கள் | – 3 (அதிக பட்சம்) |
| கிளைப் பொருளாளர் | – 1 |

7.3 நகராட்சி கிளைக்கு 10 (அதிக பட்சம்) செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். முதல் நிலை, தேர்வு நிலை, சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு –15 (அதிக பட்சம்).

7.4 நகராட்சி செயற்குழு மாதம் ஒரு முறை கூடி சங்க நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும்.

## 8 <u>கிளை நிர்வாகிகள் அதிகாரம் மற்றும் கடமைகள் :</u>

### 8.1 <u>கிளைத்தலைவர்</u>

1 நகராட்சி மைய நடவடிக்கைகள் அனைத்தும் நகராட்சி கிளைத் தலைவர் தலைமையில் இயங்கும்.

2 நகராட்சி கிளை செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களுக்குத் தலைவர் தலைமை ஏற்பார்.

3 நகராட்சி கிளைச் செயலாளர் செய்யும் செலவினங்கள் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

8. 2 **<u>கிளை துணைத்தலைவர்</u>**

1 நகராட்சி கிளை தலைவர் கலந்து கொள்ள இயலாத நிலையில் கிளை தலைவர் பொறுப்புகளை துணைத்தலைவர் செய்வார்.

2 நகராட்சி கிளை தலைவருடன் இணைந்து கலந்து பேசி சங்க நடவடிக்கைகளை நடத்த வேண்டும்.

8. 3 **<u>நகராட்சி கிளைச் செயலாளர்</u>**

1 நகராட்சி மையத்தின் தலைமை நிர்வாகி.

2 கிளையின் செயற்குழுவை செயலாளர் மாதம் ஒரு முறையும், தேவை ஏற்பட்டால் 2 நாள் அவகாசம் கொடுத்தும் கூட்டலாம்.

3 கூட்ட நடவடிக்கை குறிப்பேடு (MINUTES) செயலாளரிடம் இருக்கும்.

4 கிளையில் இருந்து அனுப்பப்படும் ஆவணங்கள் அனைத்தும் செயலாளரால் கையொப்பமிடப்படும்.

5 செயலாளர் செய்யும் செலவு தவிர மற்றைய அனைத்துச் செலவுகளுக்கும் செயலாளர் ஒப்புதல் வழங்க வேண்டும்.

8. 4 **<u>கிளை இணைச்செயலாளர் :</u>**

சங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை செயலாளருடன் இணைந்து அமுல்படுத்த வேண்டும். செயலாளர் இல்லாத நிலையில் புதிய செயலாளர் தேர்வு செய்யப்படும் வரையில் செயலாளராகச் செயல்படுவார்.

8. 5 **<u>கிளைப் பொருளாளர் :</u>**

1 கிளையின் வரவு செலவுகளைப் பராமரிப்பார்.

2 வருடம் ஒருமுறை தணிக்கை செய்யப்பட வரவு செலவு அறிக்கையை பொதுக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும்.

8. 6 நகராட்சி கிளை நிர்வாகிகள் பொதுக்குழுவைக் கூட்டி தேர்தல் நடத்தி தேர்வு செய்யப்படுவார்கள்.

9 **<u>மண்டலம்:</u>**

9. 1 **<u>நிர்வாகிகள்</u>**

| | |
|---|---|
| மண்டலத்தலைவர் | – 1 |
| மண்டல துணைத்தலைவர்கள் | – 3 |
| மண்டல செயலாளர் | – 1 |
| மண்டல அமைப்புச்செயலாளர் | – 1 |
| மண்டல இணைச்செயலாளர்கள் | – 3 |
| மண்டல பொருளாளர் | – 1 |

9. 2 நகராட்சி கிளைத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் மண்டலச் செயற்குழு உறுப்பினர்கள்

9. 3 மண்டலச் செயற்குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி சங்க நடவடிக்கைகளைத் திட்டமிடும்.

9. 4 மண்டலப் பொதுக்குழு என்பது மண்டல நிர்வாகிகள், நகராட்சி கிளை நிர்வாகிகள், நகராட்சி செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களை கொண்ட குழுவாகும்.

9. 5 மண்டலப் பொதுக்குழுவைக் கூட்டி, மண்டல நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

10 **<u>மண்டல நிர்வாகிகளின் அதிகாரங்களும் கடமைகளும் :</u>**

10.1 **<u>மண்டல தலைவர்:</u>**

1 மண்டல நடவடிக்கைகளை அனைத்தும் தலைவர் தலைமையில் இயங்கும்.

2 மண்டலச் செயற்குழு பொதுக்குழுவிற்குத் தலைமையேற்பார்.

3 மண்டல செயலாளரின் செலவுப் பட்டியல்களுக்கு ஒப்புதல் அளிப்பது.

10. 2 **மண்டல துணைத்தலைவர்:**

1 மண்டலத் தலைவருக்கு உறுதுணையாக இருந்து சங்க நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும்.

2 மண்டலத் தலைவர் பங்கேற்க இயலாத சூழ்நிலையில் சுழற்சி முறையில் பிற நிர்வாகிகள் ஒப்புதலின்படி கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். மண்டலத்தலைவர் இல்லாத நிலையில் புதிய தலைவர் தேர்வு செய்யப்படும் வரையில், துணைத் தலைவர்களில் ஒருவரை, தற்காலிகத் தலைவராக செயற்குழு நியமிக்கும்.

10. 3 **மண்டல செயலாளர்:**

1 மண்டல நிர்வாகத்தின் தலைமை நிர்வாகி.

2 மண்டலச் செயற்குழுவை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும், அவசர காலத்தில் 2 நாட்கள் அவகாசம் கொடுத்து முன்னறிவிப்புச் செய்தும் கூட்டுவார்.

3 மண்டலத்தில் உள்ள நகராட்சி கிளை செயல்பாடுகளை நேரில் சென்று பார்வையிடுவார், பிற நிர்வாகிகளுக்கு வேலைப்பகிர்வு செய்வார்.

4 கூட்ட நடவடிக்கை பதிவேடுகள்(MINUTES) செயலாளரிடம் இருக்கும்.

5 மண்டலச்செயற்குழுவில் நடவடிக்கை முன் மொழிவுகளை வைப்பார்.

6 சங்கத்தின் அசையும் மற்றும் அசையாத்சொத்துகள் இவர் பொறுப்பில் இருக்கும்.

7 செயலாளர் தவிர இதர நிர்வாகிகள் செலவுகளுக்கு ஒப்புதல் அளிப்பார்

8 சங்கத்தில் இருந்து அனுப்பப்படும் ஆவணங்களில் கையெழுத்திடுவார்.

10. 4 **மண்டல இணைச் செயலாளர்கள் :**

செயலாளருடன் இணைந்து சங்க முடிவுகளை அமுல்படுத்த உதவ வேண்டும். செயலாளர் இல்லாத நிலையில் இணைச் செயலாளர்களில் ஒருவரை தற்காலிக செயலாளராக மண்டலச் செயற்குழு நியமிக்கும்.

10. 5 **மண்டல பொருளாளர் :**

1 மண்டல வரவு – செலவுகளை கவனிப்பார்.

2 செயற்குழுவில், பொதுக்குழுவில் வரவு – செலவு அறிக்கை தாக்கல் செய்வார்.

10. 6 மண்டலப் பொதுக்குழு 1½ ஆண்டுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும்.

10. 7 பொதுக்குழுவில் எழுத்துபூர்வமான செயலாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. 8 பொதுக்குழுவில் தணிக்கை செய்யப்பட்ட வரவு – செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. 9 மண்டல மையத்திற்கென தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் மண்டலத் தலைவரும், பொருளாளரும் கூட்டாக இயக்கும்படியான கணக்கு ஆரம்பிக்கப்பட்டு இருப்பு தொகை அதில் செலுத்தப்பட வேண்டும்.

10. 10 மண்டலச் செயலாளர் ரூ.500/– முன்பணம் பெற்றுக் கொள்ளலாம்.

10. 11 மண்டல நிர்வாகிகளில் காலியிடம் ஏற்படுகிறபோது அதனை மண்டலச் செயற்குழுவில் நிரப்பிக் கொள்ளலாம். மண்டலப் பொதுக்குழு இந்த நடவடிகையை பின்னேற்பு செய்ய வேண்டும்.

10.12 நகராட்சிகளில் உறுப்பினர்களிடம் வசூல் செய்யப்படும் சந்தா, மற்றும் நன்கொடை ரசீது புத்தங்களை மண்டல மையம் அச்சிட்டுத் தரவேண்டும்.

11 <u>மாநில மையம் :</u>

11. 1 <u>மாநில நிர்வாகிகள் :</u>

மாநிலத்தலைவர் – 1

மாநிலபொதுச்செயலாளர் – 1

மாநிலபொருளாளர் – 1

மாநிலத்துணைத்தலைவர் – 5

மாநிலஅமைப்புச்செயலாளர் – 1

மாநில தலைமை நிலையச் செயலாளர் – 1

மாநிலச்செயலாளர்கள் – 7

11. 2 மாநிலச் செயலாளர் பொறுப்புகளை மண்டலச் செயலாளர்கள் ஏற்பார்கள் அல்லது மண்டலச் செயலாளர்கள் மாநில நிர்வாகி அந்தஸ்தில் செயல்படுவார்கள்

11. 3 மாநிலப் பொதுக்குழுவில் மாநில நிர்வாகிகள்மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.பொதுக்குழுவில் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

11. 4 <u>மாநிலப் பொதுக்குழுவில் இடம்பெறுவோர்</u>

மாநில நிர்வாகிகள்.

மண்டல நிர்வாகிகள்.

மண்டலப் பொதுக்குழுவில் 25 பேருக்கு ஒருவர் என தேர்வு பெறும் மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள்.

11. 5 மாநில செயற்குழு குறைந்த பட்சம் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடி மாநில மைய நடவடிக்கைகளை முடிவுசெய்யும்.

11. 6 மண்டல நிர்வாகிகள் மற்றும் நகராட்சி கிளை நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும், அந்த அமைப்புகளைக் கலைக்கும் அதிகாரமும் மாநில செயற்குழுவிற்கு உண்டு.

<u>மாநில நிர்வாகிகள் அதிகாரமும் கடமைகளும்.</u>

11. 7 <u>மாநிலத் தலைவர்</u>

1 சங்கத்தின நடவடிக்கைகள் அனைத்துக்கும் தலைமையேற்பார்.

2 மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்.

3 பொதுச் செயலாளர் செய்திடும் செலவுப் பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்கவேண்டும்.

11. 8 <u>பொதுச் செயலாளர்</u>

1 சங்கத்தின் நிர்வாகத்தின்தலைமைப் பொறுப்பை பொதுச்செயலாளர் வகிப்பார்.

2 மாநிலச் செயற்குழுவைக் கூட்டும் அதகிாரம்.

3 கூட்டப்பதிவேடு (MINUTES) உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையம் அசையும் அசையாச் சொத்துகளையும் பராமரித்தல்.

4 சங்கத்தின் சார்பாக அனைத்து ஆவணங்களிலும் கையெழுத்திடல்.

5 பொதுச் செயலாளர் செய்யும் செலவு தவிர அனைத்து நிர்வாகிகள் செய்யும் செலவுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.

6 ரூ.2000/–முன்பணமாக வைத்துக் கொள்ளலாம்.

7 மாநில நிர்வாகிகளுக்கு வேலைப் பகிர்வு செய்தல்.

8 மாநில மையத்தின் முன்மொழிவுகளை வைத்தல்.

11. 9 <u>மாநிலபொருளாளர்</u>

1 மாநில வரவு–செலவுகளை கவனிப்பார்.

2 செயற்குழுவில்,பொதுக்குழுவில் வரவு–செலவு அறிக்கை தாக்கல் செய்வார்.

11.10 <u>மாநிலத் துணைத்தலைவர்</u>

1 மாநிலத்தலைவரோடு இணைந்து நடவடிக்கைகளைத் திட்டமிடவேண்டும்.

2 மாநிலத்தலைவர் பொறுப்பு சுழற்சி முறையில் தலைமை தாங்க வேண்டும்.

3 மாநிலத்தலைவர் இல்லாத சூழ்நிலையில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை துணைத்தலைவர்களில் ஒருவரை மாநிலச் செயற்குழு, தற்காலிக மாநிலத் தலைவராக நியமிக்கும்.

11.11 <u>மாநிலஅமைப்புச்செயலாளர்</u>

1 சங்க அமைப்புகளை வலுவாக மாற்றிட மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மண்டல,நகராட்சி அமைப்புகளை செயலூக்கம் மிக்க அமைப்புகளாக மாற்றிட வேண்டும்.

2 மண்டல மைய நிர்வாகிகள் காலியிடப்பணியிடங்களை நிரப்புகிற மண்டலச் செயற்குழுவில் கலந்து கொண்டு வழிகாட்டவேண்டும்.

11. 12 <u>மாநில தலைமை நிலையச் செயலாளர்</u>

1 மாநில தலைமையகம் அமைந்துள்ள மண்டலமான சென்னை புறநகர் மண்டலத்திலிருந்து தேர்வு செய்யப்படவேண்டும்.

2 சென்னை தலைமை அலுவலகங்களில் உள்ள சங்கப் பணிகளைக் கண்காணித்து மாநில தலைமைக்கு அறிக்கை செய்வது.

11. 13 <u>மாநிலச்செயலாளர்கள்</u>

1 மண்டல அமைப்பின் செயலாளர்களாகவும் செயல்படுவதால், மண்டல அமைப்பிற்கும், மாநில அமைப்பிற்கும் பாலமாகச் செயல்பட வேண்டும்.

2 முடிவுகளை அமுல்படுத்துவதில் பொதுச்செயலாளருக்கு ஒத்துழைப்பு அளித்தல்.

12 <u>மாநிலப் பொதுக்குழு</u>

12. 1 மாநிலப் பொதுக்குழு ஒன்றறை வருடங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட வேண்டும். மூன்றாவது ஆண்டில் கூட்டப்படும் பொதுக்குழு மாநில மாநாடாக நடத்தப்படும். பேரணி, பொது மாநாடு, மாநில நிர்வாகிகள் தேர்வு ஆகியவை அதில் இடம்பெறும்.

12. 2 மாநிலப் பொதுக்குழு உயர்ந்த அதிகாரம் படைத்த அமைப்பு.

12. 3 சங்க சட்ட விதிகளை மாற்றும் அதிகாரம் மாநிலப் பொதுக்குழுவிற்கு உண்டு.

12. 4 மாநிலச் செயற்குழு, மண்டல செயற்குழு, பொதுக்குழு, நகராட்சி கிளை உள்ளிட்ட அமைப்புகள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும்,தீர்மானத்தையும் செயலாக்கும் முடிவும், ரத்து செய்யும் அதிகாரமும் மாநிலப் பொதுக்குழுவிற்கு உண்டு.

13 <u>வரவு செலவு தணிக்கை</u>

13. 1 ஆண்டு தோறும் நடத்தப்படும் நகராட்சி கிளை பொதுக்குழு, மண்டலப் பொதுக்குழு மாநிலப் பொதுக்குழு கூட்டங்களில் அந்தந்த அமைப்புகளின் தணிக்கை செய்யப்பட்ட வரவு–செலவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற வேண்டும்.

13. 2 மண்டல அளவில் இரண்டு தணிக்கையாளர்கள் மண்டலப் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்படுவார்கள்.

13. 3 மண்டலத் தணிக்கையாளர்கள் நகராட்சி கிளைகளின் வரவு–செலவுகளைத் தணிக்கை செய்வார்கள்.

13. 4 மாநில அளவில் 4 தணிக்கையாளர் மாநிலப் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்படுவார்கள். அதில் இருவர் மண்டல வரவு செலவு கணக்குகளையும், இருவர் மாநில வரவு–செலவு கணக்குகளையும் தணிக்கை செய்வார்கள்.

13. 5 மாநில தணிக்கையாளர்கள் மாநில செயற்குழு உறுப்பினர்கள் அந்தஸ்த்தில் செயல்படுவார்கள்.

13. 6 மண்டல தணிக்கையாளர்கள் மண்டல செயற்குழு உறுப்பினர் அந்தஸ்த்தில் செயல்படுவார்கள்.

13. 7 மாநில தணிக்கையாளர்கள் அவர்கள் பணியாற்றும் மண்டல செயற்குழுவில் பங்கேற்கலாம்.

14 <u>தேர்தல்</u>

14. 1 தேர்தல்கள் ஜனநாயக முறைப்படி நடத்தப்படுதல்

14. 2 நகராட்சிக் கிளை தேர்தலுக்கு மண்டல செயற்குழு, மண்டல நிர்வாகிகளில் ஒருவரை தேர்தல் அலுவலராக நியமிக்கும்.அவர் வேறு நகராட்சியில் பணி புரிபவராக இருக்க வேண்டும்.

14. 3 மண்டல தேர்தலுக்கு மாநில செயற்குழு, மாநில நிர்வாகிகளில் ஒருவரை தேர்தல் அலுவலராக நியமிக்கும்.அவர் வேறு மண்டலத்தில் பணி புரிபவராக இருக்க வேண்டும்.

14. 4 மாநில தேர்தல் ஆணையரை மாநில மையம் நியமிக்கும்.

14. 5 கிளை நிர்வாகிகள் தேர்வு 10 நாட்களுக்கு முன் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

14. 6 மண்டல மாநில நிர்வாகிகள் தேர்வு 15 நாட்களுக்கு முன் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

14. 7 அனைத்து தேர்தல் அறிவிப்புகளும் நகராட்சி அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

14. 8 <u>வேட்பு மனு கட்டணம்</u>

| | |
|---|---|
| நகராட்சிக்கிளை | ரூ.10/– |
| மண்டலமையம் | ரூ.50/– |
| மாநிலமையம் | ரூ.100/– |

14.9 மண்டல நிர்வாகத்திற்கும் மாநில நிர்வாகத்திற்கும் போட்டியிடும் வேட்பாளர்கள் சங்க உறுப்பினர் என்பதை நகராட்சி கிளைத் தலைவர் அல்லது செயலாளர் உறுதி செய்ய வேண்டும்.

14.10 நிர்வாகிகள் பொறுப்புக்கு போட்டி இருக்குமாயின் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

14.11 ஒருவர், இரண்டு பதவிகள் வைக்க இயலாது.

14.12 நிர்வாகிகள் பதவிக்காலம் மூன்றாண்டுகள்.

15 <u>சங்கக் கொடி</u>

கடல் நீல வண்ணத்தில் 3 : 2 என்ற அளவில் நீளம் அகலம் இருக்கும். மஞ்சள் எழுத்தில் த.நா.ந.அ.ச.(TNMOA) என்று இருக்கும்.

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்